ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1794/15 - 2013 ජනවාරි මස 22 වැනි අඟහරුවාදා - 2013.01.22

*1794/15 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 8/2007.*

**2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டம்**

*2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தின் 36 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஈ) மற்றும் (உ) என்னும் பந்திகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் மின்வலு, சக்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*மின்வலு, சக்தி அமைச்சர்.*

கொழும்பு,
*2013, சனவரி 10.*

ஒழுங்குவிதிகள்

*1. இவ்வொழுங்குவிதிகள் 2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, உபகரணங்களின் வலு செயற்திறன் நியமங்கள் (கூரை மின் விசிறிகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*2. ஆளெவரும் SLS 1600: 2011 என குறித்துரைக்கப்படும் இலங்கை நியமத்துடன் ஒத்திசைவு அல்லாத இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்படுகின்றவாறான கூரை மின் விசிறிகளை இலங்கைக்குள் இறக்குமதி செய்தலோ அல்லது இலங்கையில் உற்பத்தி செய்தலோ ஆகாது.*

*3. அதிகாரசபையானது ஏதேனும் கூரை மின்விசிறியின் மாதிரியை நேரொத்ததாகவுள்ள SLS 1600: 2011 இல் குறித்துரைக்கப்பட்டவாறாக நட்சத்திர தர நிர்ணயத்துடன் அத்தகைய இறக்குமதியாளரால் அல்லது உற்பத்தியாளரால் விடயத்திற்கேற்ப இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்ட ஏதேனும் கூரை மின் விசிறி ஒத்திசைவாகவுள்ளதென சான்றுறுதிப்படுத்துகின்ற இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தினால் வழங்கப்படும் சான்றிதழ் ஒன்றை சமர்ப்பிக்குமாறு இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கூரை மின்விசிறியின் எவரேனும் இறக்குமதியாளர் அல்லது உற்பத்தியாளர் ஒருவரை தேவைப்படுத்துவதற்கு தத்துவம் கொண்டதாதல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய சான்றிதழானது, சான்றில் இயைபானதாக வேண்டுமென்பதுடன் அதில் உள்ளடக்கப்படும் நிகழ்வுகள் எண்பித்தலில் முதற்றோற்றத்தளவிலான சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதலும் வேண்டும்.*

*4. இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்படும் ஏதேனும் கூரை மின் விசிறியை இலங்கைக்குள் இறக்குமதி செய்கின்ற அல்லது இலங்கையில் உற்பத்தி செய்கின்ற ஆள் ஒவ்வொருவரும், கூரை மின் விசிறியிலும், எந்தப் பெட்டியில் உள்ளடக்கப்படுகின்றதோ அப்பெட்டியின், உறையின் அல்லது சுற்றுத்தாளில் SLS 1600 : 2011 இல் குறித்துரைக்கப்பட்டவாறாக அமைப்பு, பரிமாணங்கள் மற்றும் அளவு என்பவற்றை ஒத்திருக்கின்றதும் ஏற்புடையதான நட்சத்திர தர நிர்ணயத்தை வெளிக்காட்டுகின்றதுமான வலுச் சுட்டுத்துண்டொன்றை கொண்டிருப்பதற்கு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறு வெளிக்காட்டப்படும் நட்சத்திர தர நிர்ணயத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்துகின்ற இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தினால் வழங்கப்படும் சான்றிதழ் ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.*

5. ஆளெவரும் 4 ஆம் ஒழுங்குவிதியினால் விதிக்கப்படும் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகாத வலுச் சுட்டுத்துண்டொன்றை கொண்டிருக்கின்ற உற்பத்தியின் உறைக்கு அல்லது சுற்றுத்தாளுக்கு அல்லது பெட்டிக்கு ஒட்டப்பட்டுள்ள, அது இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்டதாயினுஞ்சரி இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டதாயினுஞ்சரி இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கூரை மின் விசிறியை களஞ்சியப்படுத்தலோ வெளிக்காட்டி வைத்தலோ மொத்தமாகவோ அல்லது சில்லறையாகவோ விற்றலோ, விற்பனைக்கென முனைவு செய்தலோ அல்லது விநியோகம் செய்தலோ ஆகாது.

6. இச்சட்டத்தின் உள்ளடங்கியுள்ள ஏற்பாடுகளின் பயனாக, இவ்வொழுங்குவிதிகளின் 2 ஆம், 4 ஆம் மற்றும் 5 ஆம் ஒழுங்குவிதிகளால் விதிக்கப்படும் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கான தவறுகையின் தவறொன்றுக்காக ஆளொருவர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், அதிகார சபையானது அத்தவறுக்கு விதிக்கப்படும் தண்டனைக்கு மேலதிகமாக, எந்தக் கூரை மின் விசிறிகள் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ அந்த மின் விசிறிகளின் விடயத்திற்கேற்ப கையுதிர்ப்பு அல்லது அழிப்புக்கெனவும் அத்துடன் அத்தகைய கையுதிர்ப்பு அல்லது அழிப்புக்கென பின்பற்றப்படவேண்டிய நடபடிமுறைகளுக்கும் கட்டளையொன்றை ஆக்குவதற்கு அத்தண்டனையை விதிக்கின்ற நீதிமன்றத்தை வேண்டுவதற்கு உரித்துடையதாதல் வேண்டும். அதிகாரசபையானது சொல்லப்பட்ட கட்டளையானது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளினால் தாங்கிக்கொள்ளப்படவேண்டிய அத்தகைய கூரை மின் விசிறிகளின் கையுதிர்ப்பு அல்லது அழிப்பில் உறப்படும் செலவுகளுக்கென ஏற்பாடு செய்தல் வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுக்கலாம்.

7. இவ்வொழுங்குவிதிகளில் -

“சட்டம்” என்பது 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டம் எனப் பொருள்படும்.

“அதிகார சபை” என்பது 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை எனப் பொருள்படும் ; அத்துடன்

“இலங்கைக் கட்டளைகள் நிறுவனம்” என்பது 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கைக் கட்டளைகள் நிறுவனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைக் கட்டளைகள் நிறுவனம் எனப் பொருள்படும்.

**அட்டவணை**

1400 மில்லி மீற்றர் வெளிச் சுற்றளவுடைய இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தட்டுகளுடன் ஆகக் குறைந்தது ஐந்து ஒழுங்குறுத்தி அமைப்புக்களைக் கொண்ட ஏதேனும் கூரை மின் விசிறிகள்.

2- 259

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.